# குருதேவர்

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 34
[உறுப்பினர்களுக்கு மட்டும்] பதிவு: 135/83.



பொருளாட்சி நாயகி

[இதுவே, உலகநாயகி, புவனேசுவரி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது]

காணிக்கை: ரூ 1-00 வெளியீடு: 26—10—1986

# புரிந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள் - 2

தமிழ்நாட்டை, தமிழினத்தை, தமிழ்மொழியை, தமிழர் மதத்தை......... நாற்றங்காலாகப் பயன்படுத்தி இ.ம.இ யின் தத்துவவித்துக்களைத் தயாரிக்கும் விதைப் பண்ணையையும்; இ ம.இ. யின் தத்துவக் கன்றுகளை, இளஞ்செடிகளைத் தயாரிக்கும் நாற்றுப்பண்ணையையும் உருவாக்கவேண்டும். இதற்குரிய செயல் திட்டங்களை உருவாக்குபவர்களாகவே நாமிருக்கவேண்டும் அதாவது இந்த 'இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகள்' என்று தலைப்பிட்டுப் பட்டியலிட்டுக் காட்டக்கூடிய அளவிற்குப் புதியபுதிய சிந்தனைகளை ஏட்டளவிலாவது உருவாக்கிவிடும் ஆற்றல் மிக்கவர்களாக வேண்டும் நாம். நம்மவர்களுக்கிடையிலே பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கலந்து முடிவெடுத்துச் செயல்படலும், எக்காரணம் பற்றியும் யாருக்கும் யாரிடத்தும் வெறுப்போ, மறுப்போ, பகையோ, போட்டியோ, பொறாமையோ..... ஏற்படாமல் விட்டுக்கொடுத்துக் கட்டுப்பாட்டோடு செயல்படலும்...... வளர வேண்டும்! வாழ வேண்டும்! அப்பொழுது தான், இதுவரை உருவாகாத சாதனை நிலைகளையெல்லாம் உருவாக்கிட முடியும். நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே அன்னியர்களுக்குத் தமிழர்களை அடிமையாக்கும் பணியைத் தான் செய்கின்றன. ஏறத்தாழத் தமிழனைத் தலைவனாகக் கொண்ட கட்சி நம் நாட்டிலில்லை அதாவது, தமிழக அரசியல் வாதிகள் அன்னியர்களின் கட்சிகளுக்குக் கங்காணிகளாக, ஏசண்ட்டு -களாக [Agents], பதிலிகளாக [Representatives], கூலிகளாக [Coolies], அடிமைகளாக [Slaves] மாறுபவர்களாகவும்; பிறரை மாற்றுபவர்களாகவும் தான் இருக்கிறார்கள். எனவே, இவர்கள் திருந்தவும்; இவர்களைத் திருத்தவும் மெய்யான இந்து மத வரலாறுகளையும், இலக்கியங் -களையும், நூல்களாக அச்சிட்டு வழங்குவதோடு; சொற்பொழிவுகளின் மூலம் பரப்பிடல் வேண்டும். 'இப்படிச் செயல்படத் தலைமையிடம், அளப்பரிய பத்தியும் பணிவும் உண்மைப் பாசமும், பற்றுமுள்ள அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல் வேண்டும்! ஆனால் இன்றைய நடப்பில் பொழுதுபோக்காகவும்; தங்கள் தங்களின் செல்வாக்குக்காகவும், புகழுக்காகவும் செயல்படுபவர்களே அதிகமாக இ ம.இ. யில் இருக்கிறார்கள். இதற்குரிய மருத்துவம் துணிச்சலாகச் செய்யப்பட்டேயாக வேண்டும்.

பிறமண்ணினரான பிராமணர்கள் மிகவும் அறிவு நுட்பமிக்க அறிவியல் விலங்குகள். இவர்கள், 'தாங்கள், தமிழகத்தில் வாழ வேண்டுமேயானால், தமிழகத்தில் பல அன்னியர்களும் வாழவேண்டும்- என்ற பேருண்மையை நன்குணர்ந்தவர்கள். எனவே தான், இவர்கள், எந்த அன்னியர் தமிழகத்துக்கு வந்தாலும்; உடனே, அவர்களுடன் இரண்டறக்கலந்து; அவர்களைத் தங்களுக்குத் துணையாக்கிக் கொண்டிடுகின்றார்கள். அவர்களுக்கு அனைத்துவிதமான அன்பளிப்புக் -களையும் இரகசியமாக வழங்கி; அவர்களோடு இணைந்து தமிழர்களைத் தாழ்த்திச் சுரண்டிச் சுகபோக வாழ்வு வாழ்திடுகின்றார்கள் இதே போலத்தான், இவர்கள், தமிழர்களுக்கு மொழிப் பற்றோ மொழிப்பாசமோ, மொழியார்வமோ, மொழியுரிமையோ, மொழிப்பெருமையோ, மொழியறிவோ......... நிலையாக ஏற்பட்டுவிடாமலிருக்கத் தங்களின் சமசுக்கிருத மொழியைத் தேவ மொழியென்றும், பூசை மொழியென்றும், அருட்சத்தி மொழியென்றும் புகழ்ந்து புகழ்ந்து திசை திருப்பல்களை வளர்க்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாகத் ''தங்களின் சமசுக்கிருத மொழியிலிருந்து தான் தமிழ் மொழி தோன்றியது'', என்ற ஒரு மோசடியான கருத்தையும் பரப்பி வருகிறார்கள். இந்த முயற்சிகள் நிலைத்து நிற்பதற்காகத் தமிழர்களுக்கு ஆங்கில மொழியில் மோகத்தையும்; இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும்; செயற்கை நெருக்கடிகளாகவும், போராட்டப்பிறச்சினைகளாகவும் உருவாக்கி விட்டார்கள். இதனால், தமிழர்கள் தமிழ்மொழியை ஆழமாகக் கற்கவும்; தமிழிலக்கியங்களில் அகன்ற புலமை பெற முடியாமலும் செய்கிறார்கள் எனவே, பிறமண்ணினரான பிராமணர்களை நேரடிப் போரில் சந்தித்து வெற்றி கண்டால் தான்; தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள அனைத்துவகையான வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும், நலிவுகளையும், மெலிவுகளையும், இழிவுகளையும், அழிவுகளையும், மடக்கங்களையும், மிடிமை நிலைகளையும், அடிமை நிலைகளையும், துரோக நிலைகளையும், விரோத நிலைகளையும்..... ... முழுமையாக அகற்ற முடியும்! அகற்ற முடியும்! அகற்ற முடியும்! அதாவது, கட்டுச் சோற்றில் எலியை உயிரோடு சேர்த்து வைத்ததுபோல்; பிராமணர்கள் தமிழினத்தாரோடு வாழும் வரை தமிழர்கள் உய்வு பெறவே முடியாது! முடியாது! முடியாது! எனவே, இதற்குரிய காரண காரியங் -களையும் செயல்நிலைகளையும் ஆராய்ந்தறிந்து விளக்கிடுவது தான் இ.ம.இ. யின் கடமை அதாவது

[தொடர்ச்சி 11-ஆம் பக்கம்]

# சித்தர் இராமாயணம் - 6

இராவணனுடன் போர் செய்வதற்காகப் பரதனுக்குச் சொல்லியனுப்பிப் படைகளை வரவழைக்கலாம், என்ற கருத்தையும் சேர சோழ பாண்டிய மன்னர்களிடம் உதவி கேட்டுப் படைகளைப் பெற்று இராவணனுடன் போரிடலாம் என்ற கருத்தையும் இலக்குவன் மறுத்தான் என்பதால் தான்; இராவணனுடன் செய்த மாபெரும் போர் குரங்குகளின் போராக முடிந்துவிட்டது. இது சூரியகுலத்துப் பெருமையையே குலைப்பதாயிற்று. அதாவது, இராம இராவணப் போர் குரங்குகளின் போர் என்றும்; இராமனின் வெற்றி குரங்குகளின் வெற்றியென்றும் உலகோர் பேசுவதற்கு இடமுண்டாகி விட்டது. என்னால் இலக்குவனைக் கண்டிக்கவே முடியவில்லை. இராவணனோடு சமாதானம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் வீடணனும் இலக்குவனும் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டார்கள். அதனால் தான், என்னையும் மீறி கும்பகர்ண வதை, மேகநாதன் கொலை, இராவணன் கொலை, சூர்ப்பணகை மானபங்கம் முதலியன நிகழ்ந்து விட்டன. இந்தக் குறைகளுக்கும், கறைகளுக்கும் எத்தனையெத்தனை சிவாலயங்களைக் கட்டினாலும், சிவபூசைகளைச் செய்தாலும் பரிகாரங்களைச் செய்யமுடியாது. இவற்றிற்கெல்லாம் மேலாக, இராவணனின் மனைவி வண்டமர் குழலி என்னென்ன சாபங்களைக் கொடுத்தாள் என்பதையும், எப்படியெப்படி வயிறெரிந்து திட்டினாள் என்பதையும் முழுமையாகத் தெரிந்து கொள்ளவே முடியவில்லை. குருதேவர் உட்பட எல்லோருமே அச்சுறுத்துகிறார்கள். வண்டமர்குழலியின் சாபத்தால் எப்பிறப்பிலுமே எனக்குவீரமரணம் கிடையாது, நிம்மதி கிடையாது. நிறைவு கிடையாது. மன அமைதி கிடையாது. என்று...... இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது இந்த அரக்கப் போரே செய்திருக்கக் கூடாது என்றுதான் தோன்றுகிறது. சீதை இப்போது நெருப்புக்குளிக்க நேரிட்டது போலல்லாமல் அசோகவனத்திலேயே இராவணன் முன்னிலையிலேயே அவள் நெருப்புக்குளித்து மீண்டிருக்கலாம் என்று விட்டிருக்க வேண்டும். சீதையை மீட்டுவர விசுவாமித்திரரையோ, வசிட்டரையோ, குருதேவரையோ உதவி செய்யுமாறு கேட்டிருக்கலாம். அனாவசியமாக இப்படிப் பெரும் பழிக்கும், சாபத்துக்கும், கோபத்துக்கும் உள்ளாக்கியிருக்கத் தேவையில்லை. போர்க் களத்தில் மாண்ட இராவணனும் வண்டமர் குழலியும் அமரர்களாகி விட்டார்கள். இனியென் கதி என்னவோ? என் விதி என்னவோ!?!? என்று இராமன் இராவணனைக் கொன்றதிலிருந்து கடைசியில் சரயுநதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் வரை அழுது புலம்பி அரற்றிக் கொண்டேயிருந்தான் — என்ற இக்கருத்துக்களை யக்ஞவல்லி இராமன் உயிரோடு இருக்கும் போதே குறித்து வைத்திருக்கிறார். இராம இலக்குவனர்களின் பிணம் சரயுநதியில் எவ்வளவோ தேடியும் கிடைக்காமல் போன பிறகு இலவகுசர்களை வைத்து சரயு ஆற்றங்கரையில் ஈமக்கடன்களை செய்த போதும், அதற்குப் பிறகும்; மேற்படி இராமனின் புலம்பல்களை மிகத்தெளிவாகக் குறிக்கின்றார்.

சூரிய குலத்தின் பெருமைகளையும், உரிமைகளையும், நாயகர்களையும் மிகுதியாகப் பெற்ற ஒரு யுகம்தான் இராமன் வாழ்ந்த அல்லது இராமாயணம் நடந்த திரேதாயுகம். மற்றபடி முதல் யுகமான கிரேதா யுகம் சந்திர குலத்துக்குரிய சிவன், முருகன், கருவூரார் முதலியவர்களை விளக்குவதாகவும்; மூன்றாவது யுகமான துவாபரயுகம் சந்திர குலத்துக்குரிய கருவூராரின் குருகுலத்தார் வரலாற்றைக் கூறுவதாகவே அமைகிறது. நான்காவது யுகமான கலியுகத்தில் 39 (முப்பத்தொன்பது) பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றப் போகிறார்கள் என்ற ஒரே சிறப்புத்தான் உண்டு. இந்தப் பீடாதிபதிகள் சந்திர குலத்துக்குரிய கருவூராரின் கருவழிவாரிசுகளேயாவார்கள் எனவே, இந்த நான்காவது யுகமும்; முதல்யுகத்தையும் மூன்றாவது யுகத்தையும் போல சந்திர குலத்தின் பெருமையைக் கூறுவதாகத்தான் அமைகிறது. இப்பேருண்மைகளையெல்லாம், முக்காலத்தையும் உணரும் அருளாற்றல் படைத்த யக்ஞவல்லி மிகமிகத் தெளிவாக உணர்ந்திருந்த காரணத்தினால் தான் சூரியகுலத்தின் பெருமை நிலைக்கும் வண்ணம் தனது யுகத்தின் செய்திகளை மிகமிக விரிவாக முறையாகத் தொகுத்துச் சுவைமிக்க காப்பியங்களையும் புராணங்களையும், இதிகாசங்களையும், கதைகளையும், கவிதைகளையும், கீதைகளையும் 27 (இருபத்தேழு) வண்ண இலக்கியங்களாக வடிவெடுக்கச் செய்தார். இதற்கு, எழுத்தாற்றல் மிக்க பதினெட்டு வால்மீகிகளையும், பதினெட்டுக் கம்பர்களையும், ஆணையிட்டு இலக்கியங்கள் படைக்கச் செய்தார். இவர்களல்லாமல் அவருக்குக் கிடைத்த வியாசர்கள், நாரதர்கள், போதாயனர்கள், வேதாயனர்கள், ஓதாயனர்கள்......... முதலியவர்களையெல்லாம் சூரியகுலப் பெருமை கூறும் இலக்கியங்களைப்

—தொடர்ச்சி 6-ம் பக்கம்

# புரட்சி மயங்கக்கூடாது........ 3

—சித்தர் கருவூரர்

இந்தியத் துணைக் கண்டம் சமுதாயப் புரட்சிக்காக பிரசவ வேதனைப்படுவது போல் அரசியல் புரட்சிக்காக எள் முனையளவு கூட வேதனைப்படதேவையில்லை. ஏனென்றால் சமுதாயப்புரட்சி என்கின்ற குழந்தை பிறந்து விட்டால் அந்த குழந்தைக்காக பெற்றோர்கள் விளையாட்டுப் பொருள்கள் வாங்கித்தருவது போல் பொது மக்களே தொழில்புரட்சி, பொருளாதாரப் புரட்சி, அரசியல் புரட்சி முதலியவைகளை தன்முனைப்பாக உருவாக்கிடுவார்கள் இதற்காகத்தான் நாம் நமது மக்களுக்கு 'மொழி வரலாறு', 'இலக்கிய வரலாறு', 'சமய வரலாறு', 'இன வரலாறு', 'பண்பாட்டு வரலாறு'. கலை வரலாறு','சமுதாய வரலாறு', 'அரசியல் வரலாறு' ......முதலிய பல வரலாறுகளை காலக் கணக்கீட்டு அடிப்படையில் மிகமிகத் தெளிவாக விளக்கமாக நேரடியாக அறிவிக்கவும் கற்றுக் கொடுக்கவும் முற்படுகின்றோம். இதற்காகவே நாம் அருளாதாரத்தையும், பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சமய, சமுதாய, கலை, இலக்கிய, பண்பாடு, தத்துவம்... பணிகளை விரிவாக்கி வருகின்றோம். இதனை யாம் அண்மைக் காலமாக உள் நாட்டு, வெளிநாட்டு அருளாளர்களின் ஒத்துழைப்போடு உருவாக்கி அறிவித்து வரும் **அருட்பணி விரிவாக்க மடல்கள், முடங்கல்கள் அஞ்சல்கள், திருவோலைகள், திருவாணைகள், குருவாணைகள்**...... முதலியன விளக்குகின்றன. இவற்றின் செயல்வடிவங்களே நமது சித்தரடியான்கள், சித்தரயடியாள்கள், சித்தரடியார்கள் சித்தர்நெறி ஆர்வலர்கள், ஆதரவாளர்கள்...... முதலியவர்கள்; சமயம், சமுதாயம், அறிவியல், மொழி, கலை. இலக்கியம், தத்துவம் முதலியவற்றின் பெயரால் தோற்றுவிக்கின்ற மன்றங்கள், குழுக்கள், கழகங்கள், சபைகள், சங்கங்கள். அவைகள், இயக்கங்கள்...... ...முதலியன. எனவே இந்த அமைப்புக்களின் மூலம் கலந்துரையாடல்களையும் (Discussions) உரையாடல்களையும் (Conversation) சொற்போர்களையும் அல்லது பேச்சுப் போட்டிக்களையும் (Debates) சொற்பொழிவுகளையும் (Orations and speeches) வளர்க்க வேண்டும். அவை தான் புரட்சிச் சிந்தனைகளை கருவாக்கி உருவாக்கி வளர்த்து **கருத்துப் புரட்சியை** (Revolution in idealogy) தோற்றுவிக்கும். அதன்பிறகே **எண்ணப் புரட்சியை** (Revolution of thoughts or ideas or Policies or principles) மலரச் செய்திடும்.

நமது நாட்டில் உண்மையான ஆர்வத்தோடும் உழைப்போடும் கல்வி கற்று தேர்ந்தவர்கள் மிகமிகக் குறைவு. ஏனெனில் ஆரம்பக் காலத்திலிருந்தே கல்வி, காசு கொடுத்துவிலைக்குவாங்கும் கடைச்சரக்காகவே இருந்து வந்திருக்கின்றது இத்திருநாட்டில் இன்றுகூட இலவசக் கல்வி, மலிவுவிலைக்கல்வி. விலையுயர்ந்தகல்வி, அதிகவிலைக்கல்வி என்று மூன்று வகை விலைக்குக் கல்வி கிடைக்கிறது. இதைவிட கொடுமை, அரசாங்கமே உதவித் தொகையும் (Scholarships) கடனும் (loan) கொடுத்து படிக்கச் சொல்லும் அலுவல் உத்திரவாதமுள்ள கல்வியாக தொழிற் கல்வி என்ற ஒன்றும்; ஏனோதானோ வென்று, பெயரளவில் சிறு தொகை, தேர்ந்தெடுக்கப் பட்ட சிலருக்கு மட்டுமே உதவித் தொகையாக வழங்கப் பட்டு கடன் மறுக்கப்பட்டு படிக்கச் சொல்லும் அலுவல் உத்தரவாதமற்ற கல்வியாக அறிவியல், கலைக்கல்வி இருக்கின்றது.

[The study of Arts and Science has no scholarships and lead except the community scholarship; that too only for a very selected people with a small amount and the government itself openly declares that there is no security of job by its treatments and trends towards the Arts and Science students ]

இந்த நிலையில் வாழ்க்கைக்குப் **பொருளீட்டப் பயனற்ற** (This education is not useful to earn money) கல்வியைக் கற்ற இளைஞர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் (unemployment Programme) என்னும் நெருப்பில் வெந்து காலப்போக்கில் கருகிச் சாம்பலாகிவிடும் அவலநிலைதான் மிஞ்சுகின்றது. இன்னும் சொல்லப்போனால் இந்தக் 'கலை, அறிவியல் கல்வி' கோழைகளையும், வாழ்க்கையைத் துணிந்து நடத்த முடியாத அப்பாவிகளையுமே உருவாக்கும் தன்மை பெற்றதாக இருக்கிறது ஆனால் இதை நம்பித்தான் இன்றைய இளைஞர்கள் வகைவகையாக உடுத்தி, வாய்நிறைய சிரித்து, வாலிபப் பருவத்தை வதைத்து கற்று வருகின்றனர். அதாவது, பலியாடு தன்னை வெட்டப் போகும் பூசாறியை நம்பி விடுவது போல் தங்களின் வாழ்க்கையை பற்றுக்குறையாலும், அடிமைத்தன்மையாலும், சலிப்பான எழுத்தர் பணியாலும் வீணாக்கிடப் போகும் இன்றையக் கல்வியை இந்நாட்டின் இளைஞர்கள் நம்பிடுகின்றனர் -கள். இனி இந்த நாடு எப்படி உருப்படப் போகின்றது? எப்போது உருப்படப் போகிறது.........?

—தொடரும்

---

11-ஆம் பக்கம் தொடர்ச்சி

என்ற நூலை எழுதிட்டார். ஆனால் அவர் எதிர்பார்த்த பயன் ஏற்படவில்லை. அதனால் மார்ச்சு மாதத்தில் அவர் வெளியிட்ட கார்ல் மார்க்சின் ''பிரஞ்சின் உள்நாட்டுப் போர்'' என்ற நூலில் செர்மன் சோசல் டெமாக்ரடிக்சின் மந்த நிலையை, ஆபாச நிலையை, ஆபத்து நிலையை, இழி நிலையை கடுமையாக விமர்சித்தார். செர்மன் பூர்சுவா அரசாங்கத்திடம்......... ''மூடநம்பிக்கை நிறைந்த, மதிப்பையும், பத்தியையும், பணியையும், விசுவாசத்தையும் சோசல் டெமாக்ரடிக் இயக்கம் செலுத்துவதற்குக் காரணம்: அதனுள் ஊடுருவல் செய்துள்ள சந்தர்ப்பவாதக் கொள்கையுடைய குட்டி பூர்சுவாக்கள் தான்.........'என்று சாட்டையடிகொடுத்தார்.

இருந்தும் அவர் எதிர்பார்த்த மாற்றம் சோசல் டெமாக்ரடிக் இயக்கத்தில் ஏற்படாததால் சூன்மாத இறுதியில் 'எர்புர்ட் சோசல்' டெமாக்ரடிக்மா நாட்டில் விவாதிக்கப்பவிருக்கும் கட்சியின் வேலைத் திட்டம் பற்றிய தமது கருத்துக்களைத் தெளிவாக விளக்கி விரித்து எழுதினர்

இவற்றின் விளைவாக எங்கல்சு 1893 ஆகசுட்டு - செப்டம்பர் மாத காலங்களில் சூரிச்சில் நடைபெற்ற 'சர்வதேச சோசலிசிட் மாநாட்டில்' கலந்து கொண்டு தமது கருத்துக்கள் அரசியல் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் சொற்பொழிவை வரவேற்புரையாக நிகழ்த்தினர், அவரது புகழ் உலகங்கும் வியத்தகு முறையில் விரிவடைய இச்சொற்பொழிவை நிகழ்த்திய எங்கல்சு, திரும்பும் வழியில் அவரை வரவேற்க 'வியன்னா'விலும் 'பெர்லினி'லும் கூடியிருந்த மிகப் பெரிய தொழிலாளர் கூட்டங்களில் சூரிச் மாநாட்டுப் பேச்சை அடிப்படையாகக் கொண்டு பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

—தொடரும்

3 - பக்கத் தொடர்ச்சி

படைக்கச் செய்தார். இருந்த போதிலும், இவர், வண்டமர் குழலி சூரியகுலக் காப்பிய நாயகனை இராமனைப் பற்றிக் கூறிய பல செய்திகளை அவர்களின் ஈமக்கடன்களைப் பற்றி விவரிக்கும் போதும், தசரதனின் ஈமக்கடன்களின் போதும், இராமனின் ஈமக்கடன்களின் போதும், சனகனிடம் இராம இராவணப் போரைப் பற்றிப் பேசும் போதும் தாராளமாகப் பச்சையாகவும், கொச்சையாக வும் பலசெய்திகளைக் குறிப்புகளாகத்தருகிறுர். அவற்றுள் சில:

## (இராவணின் இறந்த உடம்பின் மீது விழுந்து அரற்றும் வண்டமர் குழலியின் புலம்பல்கள்)

''......பிறந்தது முதலே இராமன் எதையும் யோசிக்காமல் சிறுபிள்ளைத்தனமாக தன்விருப்பம் போல் செயல்பட்டுப் பழகியவன். தசரதனின் பாச உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு பரதனுக்குரிய நாட்டை அவனில்லாத போது முடிசூட்டிக்கொண்டு உரிமை பாராட்ட ஆசைபட்டான். இதைப்போலவே இலங்கையுத்தத்தில் சிறுபிள்ளைத்தனமாகவும் தான்தோன்றித்தனமாகவும் முறையற்றுச் செயலபட்டு விட்டான். இதனை ஊகித்துணர்ந்து எத்தனையோ முறை எடுத்துக் கூறியும் எச்சரிக்கையாகச் செயல்படாமல் போய்விட்டான் தன் கணவன்,' என்றும்,

'வாலியை விட்டுச் சுக்கிரீவனை மட்டும் தனித்துப் பிரித்து அண்ணனுக்குரிய நாட்டை தம்பிக்கு முடிசூட்டித்தருவதாக வாக்களித்துத் தனக்குப் பக்கபலம் தேடிக்கொண்ட முறைகேடனை இராமன் தன்னுடைய கணவன், இலங்கையை ஆண்டு கொண்டிருக்கும் பொழுதே தன் கணவனின் தம்பி வீடணனை அழைத்து இலங்கையரசிற்க முடிசூட்டி அண்ணன தம்பியைப் பிரித்துத் தனக்கு வலிமையூட்டிக் கொண்டான். இப்படிப்பட்ட முறைகேடனை எதிர்க்க மிகுந்த எச்சரிக்கை தேவை என்று எத்தனையோ முறை கூறியும் தன்னுடைய கணவன் எச்சரிக்கையுடையத் தவறிவிட்டான்' என்றும்,

'16 வயதுப் பாலகனை இராமன் 32 வயதுச் சீதையால், காமக்களியாட்ட விளையாட்டுப் பொருளாகத்தான் பயன் படுத்தப்பட்டான் என்பதால் இராமனுக்கு நீதியுணர்வோ, நேர்மை யுணர்வோ, மனச்சாட்சியோ, அறச்சிந்தையோ, அருள் நெஞ்சமோ இருக்காது என்பதால் அவனோடு போராட்டமோ போரோ தேவையில்லை. அவனைச் சிறுபிள்ளையாக நினைத்து மன்னித்து விடலாம் என்று சூர்ப்பணகையின் தகராறின்போதே தான் கூறியதைத் தன் கணவன் கேட்கவில்லை' என்றும்

போர்க்களத்தில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற தன் கணவரின் தம்பி கும்பகர்ணன் (கும்பகன்னன்) தனது வெற்றியின் அடையாளமாக சுக்கிரீவனைக் கட்டிப்பிடித்து இருகைகளிலும் தூக்கிக்கொண்டு முன்னிரவின் இருளில் இலங்கை நகருககுத் திரும்பிக் கொண்டிருந்த போது கோட்டை மதிலின் நிழலிருட்டில ஒளிந்திருந்து முகமெங்கும் அம்புகளை விட்டு அநீதியாக அநியாயமாக முறைகேடாக கொலை செய்த நேர்மையற்ற தசரதன் மகனோடு போர் புரிவதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று எத்தனையோ முறை தான் எடுத்துக் கூறியதைக் கேட்கத் தவறிவிட்டார் தன் கணவர்' என்றும,

'மேகநாதனை பூசைசெய்து கொண்டிருக்கிறுன் என்று கூட எண்ணுமல் பின்னுலிருந்து முதுகில் அம்பெய்திக் கொன்ற இழிசெயல் இலக்குவனின் அண்ணன்தான் இராமன் என்பதால் அவனோடு போர் புரிவதில் மிகவும எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று எத்தனையோமுறை தான் எடுத்துக் கூறியதைக் கேட்கத் தவறிவிட்டான் தன் கணவன்' என்றும்,

'நமது படையின் வலிமையையெல்லாம் தெரிந்த வீடணனின் துணையோடு இராமன் படையெடுத்திருக்கிறுன். அதனுல் படைகளை அனுப்புவதிலும் படைத்தளபதிகளைத் தேர்ந்தெடுப் பதிலும போர்முறையிலும மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று எத்தனையோ முறை தான எடுத்துக் கூறியதைத் தன் கணவன் கேட்கவில்லை' என்றும்,

—தொடரும்

# விடுபேறு வழங்கு இறுதியுரை
## [நீத்தார் வழிபாட்டு மந்திரம்]

1. ஓம் நிலவே பகலவனே போற்றி
2. ஓம் அறியே அரியே போற்றி
3. ஓம் நமசிவாய நாராயணு போற்றி
4. ஓம் கருவூருரே காகபுசுண்டரே போற்றி
5 ஓம் தாத்தாக்களே ஆத்தாக்களே போற்றி
6. ஓம் அறி அரி நமசிவாய நாராயணு நாமாகுக

1. ஓம்! கோள் நாள் மீன் வல்ல வான்பாம்பு
அரு வடிவ இராசி வல்லாட்சி
பொல்லாங்கு நீங்குக

2. ஓம்! ஆள்வினை சூழ்வினை ஊழ்வினை
ஆட்சியுறு பேய்நிலை தேய்நிலை
ஓய்நிலை மாய்நிலை நீங்குக

3. ஓம் எள் அருகு எருக்கு எட்டி
தருப்பை பொல்லாங்கு போக்கு அருளூறு
வாக்கு வாக்கியம் வாசகம் வெல்லட்டும்

4. ஓம் தாள் பணிந்தே தாத்தாக்கள் ஆத்தாக்கள்
அம்மையப்பன்கள் கருக்கள் குருக்கள்
தருக்கள் திருக்கள் காத்திட வேண்டுகிறோம்.

5 ஓம் உள்ளம் நிறை பூசை தவம் ஞானம்
சிந்தை வளர் ஐந்தீ வேட்டல் முத்தீ யோம்பல் தொழுகை
உடலூறு அரற்றல் பாடுகிடத்தல் பயனுறட்டும்

6. ஓம் நீளமைதி நிலவட்டும் ஆழன்பு வளரட்டும்
வளரின்பம் விளையட்டும் நன்மை ஓங்கட்டும்
எழிச்சி செழிக்கட்டும் மகிழ்ச்சி மலரட்டும்

(1) ஓம் சத்தி! ஓம் சத்தி! ஓம் சத்தி! ஓம் சத்தி! ஓம் சத்தி! ஓம் சத்தி!

(2) ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!

(3) ஓம் நாராயண நாராயணி! ஓம் நாராயண நாராயணி! ஓம் நாராயண நாராயணி!
ஓம் நாராயண நாராயணி! ஓம் நாராயண நாராயணி! ஓம் நாராயண நாராயணி!

(4) ஓம் அரி அறி தேவி தேவா! ஓம் அரி அறி தேவி தேவா!
ஓம் அரி அறி தேவி தேவா! ஓம் அரி அறி தேவி தேவா
ஓம் அரி அறி தேவி தேவா! ஓம் அரி அறி தேவி தேவா

(5) ஓம் மூவாதி தேவப் பரமே! ஓம் மூவாதி தேவப் பரமே!
ஓம் மூவாதி தேவப் பரமே! ஓம் மூவாதி தேவப் பரமே!
ஓம் மூவாதி தேவப் பரமே! ஓம் மூவாதி தேவப் பரமே!

(4) ஓம் அனுதியாதியே பாதிமீதியே! ஓம் அனுதியாதியே பாதிமீதியே
ஓம் அனுதியாதியே பாதிமீதியே! ஓம் அனுதியாதியே பாதிமீதியே
ஓம் அனுதியாதியே பாதிமீதியே! ஓம் அனுதியாதியே பாதிமீதியே

1. ஓம் ஈசுவர நாராயணப் பிறம்மமே காத்திடு!
2. ஓம் சங்கர நாராயணப் பிறம்மமே காத்திடு!
3 ஓம் சிவ நாராயணப் பிறம்மமே காத்திடு!
4. ஓம் பரம நாராயணப் பிறம்மமே காத்திடு!
1. எண்டிசைக் காவலே தழைத்தெழுக! பயனுறுக!
2. பேரண்டக் காவலே தழைத்தெழுக! பயனுறுக!
3. அண்டக் காவலே தழைத்தெழுக! பயனுறுக!
4. பிண்டக் காவலே தழைத்தெழுக! பயனுறுக!

தொடர்ச்சி 10-ம் பக்கம்

# காலடி ஆதிசங்கராச்சாரியாரின் திருவுருவத் தோற்றம் - 3

பிருமணர்களைப் பற்றி அதிகமாகப் பச்சையாகவும், கொச்சையாகவும், விமர்சிக்கும் திருமாளிகைத்தேவர் பிருமணர்களின் தலைவராகவே விளங்கினார். அதாவது, ஒரு பெரிய கணிசமான அளவு பிருமணர்கள் திருமாளிகைத் தேவரின் மாணுக்கர்களாகத் தயாராகி இந்துமறுமலர்ச்சிஇயக்கப்பணிகளில்ஈடுபட்டிட்டார்கள். இவர்கள் முழுக்க முழுக்க பிருமணாகளால் மெய்யான இந்து மதத்திற்கு ஏற்பட்ட கேடுகளைத் தடுக்கும் பணியிலும். அகற்றும் பணியிலும் ஈடுபட்டிட்டார்கள். எனவே தான், திருமாளிகைத் தேவர் பிருமணர்களைப் பற்றி மிகுதியான விமரிசனங்களை வழங்கினார். அவற்றுள் ஒன்று, தனது தாத்தாவால் உருவாக்கப்பட்ட சீர்காழி சிவாச்சாரியார் பரம்பரையைச் சார்ந்த சிவகுரு எனும் சிவாச்சாரியாரின் மகனாகக் காலடியில் தோன்றிய 32-வது ஆதிசங்கராச்சாரியார் பீடமான காலடி ஆதிசங்கராச் சாரியார் பற்றிய பொய்யான. தவறான, பிழையான, மாயமான, இருட்டடிப்பான கருத்துக்களையும், செய்திகளையும் கடுமையாகத் தாக்கி விமர்சித்து எழுதுவது. அதாவது, இவருடைய குருபாரம்பரிய வாசகங்களில்தான் காலடி ஆதிசங்கராச்சாரி யார் பற்றிய செய்திகள் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பட்டியலிட்டுப் பல ஆயிரம் பக்கமுள்ள நூலாகவும் வெளியிடலாம். ஆனால், அப்படியொரு நூலை வெளியிடுவதற்கு முன்னால் இம்மண்ணுலகம் தோன்றிய காலத்திலிருந்து வாழையடி வாழையாகத் தோன்றிவரும் பதினெண் சித்தர்களின் பரம்பரையிலே; பதினோராவது பதினெண் சித்தர் பீடமாக, அருளுலகின் பேரரசாக திறல்மிக்க வேந்தராக, அருட் பேரரசின் அரியணையில் அமர்ந்திட்ட தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் பேரனாகத் தோன்றிய இவர், தன்னுடைய தாத்தாவின் வாழ்வியல்களையும், வரலாற்றுப் புகழ் மிக்க சாதனைகளையும், வையகம் புகழ் போதனைகளையும், வீரதீரமிக்க நிகழ்ச்சிகளை யும், விவேகமிக்க அரசியல் சித்தாந்தங்களையும், பயன்மிக்க சமுதாய மாற்றச்சிந்தனை -களையும், உயிர்த்துடிப்பு மிக்க சமய தத்துவ விளக்கங்களையும், உருவாக்கிய நானு வித கலைஞர்களையும், படைப்பாற்றலின் மிகப்பெரிய செயல் வடிவங்களான கலைப் பொருள்களையும், கலைக் கருவூலங்களையும்.........பற்றி **எழுதப்புகாமல்** அல்லது எழுத முன்வராமல் இமயம் கடந்தும், குமரிமுனை கடந்தும், சிந்துவைக் கடந்தும், பிறமபுத்திராவைக் கடந்தும் உலகப் பேரரசாக விளங்கும் சோழப்பேரரசின் பல நூறுயிரம் பேர்வீரர்களின் ஆயுதப்பயிற்சிக்கும் பல்லாயிரக்கணக்கான யானை குதிரை முதலியவைகளின் பயிற்சிக்கும் போர்ப்படைத் தளபதிகளின் தனித்திறனுக் -கும்.........முழுக்க முழுக்கக் காரணமாக இருந்திடும் தனது தந்தை கருவூர்த் தேவரின் போராட்டங்கள் மிகுந்த வாழ்வியல் சிந்தனைகளையும், போதனைகளையும். பற்றி **எழுதப்புகாமல்;** அவரது செல்வமகன், செல்லமகன் திருமாளிகைத் தேவன். தாய்நாடு விட்டும், குருமொழி மறுத்தும் இமயமலையில் சென்று நீள்தவத்தில் ஆழ்ந்து நிறைந்திட்ட காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றி மிகுதியாக எழுதப் புகுந்தது ஏன்? ஏன்? ஏன்?...... என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண முயலும் போது தான் காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றிய பொய்யான வரலாற்றுச் செய்திகள் தான் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் உயிர்நாடி! உயிர்நாடி! உயிர்நாடி! அடிப்படை! அடிப்படை! அடிப்படை! என்ற பேருண்மை விளங்கிடும்.

பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோற்றுவித்த [i] 48 பீடங்கள் [ii] 48 மடங்கள் [iii] 48 அமளிகைகள் [IV] 48 இருக்கைகள் [V] 48 திருவடிகள் எனும் ஐந்து வகையான அருளுலக அரியணைகள், அருளுலக அரச பரம்பரைகள்......முழுமையாக மெய்யான இந்துக்களால் மறக்கப்பட்டுவிட்டன! மறக்கப்பட்டு விட்டன! மறக்கப்பட்டுவிட்டன! அதாவது, **'நமசிவாய என்ற ஐந்தெழுத்துதான் பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான இந்துமதம்'** என்ற தத்துவப்படியே பதினெண் சித்தர்கள் தங்களுடைய சித்தர் நெறியெனும் அருளுலகிற்கு ஐந்து வகையான ஞானவேந்தர்களை. மடம், பீடம், அமளிகை, இருக்கை, திருவடி, என்ற பெயர்களில் உருவாக்கினார்கள். சித்தர் நெறிக்கே உரிய மரபுப்படி இந்த ஒவ்வொரு வகையிலும் இந்த நான்கு யுகங்களையும் ஆளுவதற்கு நாற்பத்தெட்டு ஞானவேந்தர்கள் தோன்றி-டும் செயல் திட்டங்களையும், வகுத்திட்டார்கள். அதாவது, இந்த மண்ணுலகில் இளமுறியாக்கண்ட காலத்திலிருந்து புதிதாகத் தோன்றக்கூடிய மண்ணுலக ஆண்டு வரை காலப்போக்கில் தோன்றிடக்கூடிய அருளாளர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காகவே 48 பீடங்களையும், 48 மடங்களையும், 48 இருக்கைகளையும், 48 திருவடிகளையும் உருவாக்கினார்கள். இவை பற்றிய பேருண்மைகள் அனைத்தும் வைகையாற்றங்கரையிலிருந்த மூன்றாவது தமிழ்ச்சங்கத்தைப்பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வட ஆரியர்கள் எரித்து அழித்ததோடு சிதைந்து சீரழிந்து போயின. இவைபற்றி அமராவதியாற்றங்கரைக் கருவூராரின் சில குறிப்புக்கள் தவிர வேறு சான்றுகள் இல்லை.

எனவேதான் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தன் காலத்து திரு அருட்பிறப்பெடுத்த காலடி ஆதிசங்கரரை பாலகப் பருவத்திலிருந்தே தன்னுடைய நேரடிப் பார்வையில் தயாரித்து இம் மண்ணுலகில் எங்கெங்கு பீடங்கள் இருக்கின்-றன என்று கண்டுபிடித்து அதைப்புத்துயிர்ப்புச் செய்யும்படி ஆணையிட்டார். ஆனால், காலடி ஆதிசங்கரரோ தன்னால் இவ்வளவு பெரிய பணியை முழுமையாக நிறைவேற்றிடுவதற்காக நெடுங்காலம் வாழ இயலாது என்று மறுத்துவிட்டார். அதாவது, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் காலடி ஆதிசங்கரரை 128 ஆண்டுகள் வாழுமாறு ஆணையிட்டதை காலடி ஆதிசங்கரர் முழுமையாக மறுத்துவிட்டார்.

அதன் பிறகே ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் அவரை 96 ஆண்டுகள் அல்லது 64 ஆண்டுகள் வாழுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், அவரோ தன்னால் 32 ஆண்டுகள் மட்டும்தான் வாழ முடியும் என்று கூறிவிட்டார். என்பதால்! தான் இந்தியாவிற்குள் இருக்கின்ற மடங்களில் உலகியலின்படி மிகமிகத் தேவையான மடங்களையெல்லாம் புத்துயிர்ப்புச் செய்யும்படி ஆணையிட்டார். காலடி ஆதிசங்கராச்சாரியாரும் 32 ஆண்டுகளுக்குள் குறைந்தது 32 பீடங்களையாவது புத்துயிர்ப்புச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துச் செயல்பட்டார். ஆனால் நான்கு பீடங்களே [1 பத்திரிநாத்து 2. துவாரகை 3 பூரி [4 சிருங்கேரி] முழுமையாகப் புத்துயிர்ப்புப் பெற்றன. இந்த மாபெரும் வரலாற்றுப் பேருண்மையினைச் சிதைத்துச் சீரழித்த பிருமணர்கள் காலடி ஆதிசங்கராச்சாரியார் தோற்றுவித்தது நான்கே நான்கு பீடங்கள்தான் என்று வறட்டுப் பிடிவாதமாகச் சாதித்து விட்டார்கள். இதனால், பீடம், பீடாதிபதி, மடம், மடாதிபதி என்ற சொற்களின் வரலாறுகளும் அவற்றிற்குரிய தத்துவ சித்தாந்த விளக்கங்களும் மறைந்தொழிந்தன. இதனால் பதினெண் சித்தர்கள் தோற்றுவித்த மெய்யான இந்துமதம் மாபெரும் குழப்பங்களையும், இழப்புக்களையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும், திருத்தல்களையும், திருப்பங்களையும், பெற்றுவிட்டது, பெற்றுவிட்டது, பெற்றுவிட்டது. அதாவது. பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குரிய காலடி ஆதிசங்கராச்சாரியார் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் பொய்யான ஹிந்துமதத்திற்கு உரியவராக்கப் பட்டு 'விட்டார், உரியவராக்கப்பட்டுவிட்டார், உரியவராக்கப்பட்டுவிட்டார். இவற்றையெல்லாம் எண்ணித்தான் திருமாளிகைத் தேவர் காலடி ஆதிசங்கராச்சாரியாரைப் பொய்யான ஹிந்துமதத்தின் பிடியிலிருந்து விடுவித்து; அவரை மெய்யான இந்துமதத்திற்கு உரியவராக்கும் பணியில் ஈடுபட்டிட்டார் என்ற வரலாற்று உண்மையை இந்நாடு உணர்ந்தால் போதும்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

1. நமசிவாயமே காப்பாகி நாமாகுக!
2. பராசத்தியே காப்பாகி நாமாகுக!
3. நாராயணமே காப்பாகி நாமாகுக!
4. பிறம்மமே காப்பாகி நாமாகுக!
5. குபேரமே காப்பாகி நாமாகுக!
6. இயமமே காப்பாகி நாமாகுக!
7. இந்திரமே காப்பாகி நாமாகுக!
8. தேவேந்திரமே காப்பாகி நாமாகுக!
9. மகேந்திரமே காப்பாகி நாமாகுக!
10. சரவணபவமே காப்பாகி நாமாகுக!

அனைத்தும் பிழைத்திடுக! தழைத்திடுக! நலமாகிடுக!

ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

குருபாரம்பரியங்களில் அனைத்துப் பூசைகளின் இறுதியிலும் கூறுகின்ற உரைகள் சில குறிக்கப்படுகின்றன. அவற்றுள், இந்த உரை அதிகமாகப் பல இடங்களில்; பல பதினெண் சித்தர் பீடாதிபதிகளாலும் குறிக்கப்படும் **'இறுதியுரை'** இதுவே

உயிர் பிரிந்து விடக்கூடிய நிலையில் உள்ளவர்களின் காதில் ஓதப்பட வேண்டியது இந்த இறுதியுரை சிறப்பாக 'வீடுபேறு வழங்கு இறுதியுரை' எனக்குறிக்கப்படுகின்றது.

எதிர்பாராமல், இந்த இறுதியுரையைக் கூறுவதற்கு முன்பாக இறந்து விடுபவர்கள் இருந்தாலோ; அல்லது, ஏற்கனவே இறந்தவர்களுக்காகக் கருமாதி, ஆண்டுத் 'தீவசம்' [இது, திவசம், தவவசம் —> தவசம்.........என்று குறிக்கப்படுவது வழக்காறு]. பிண அடக்கச் சடங்கு, எரிக்கும் போது, பால் தெளியலின் போது, நீத்தார் நினைவுத் திருநாளின் போது இந்த வீடுபேறு வழங்கு இறுதியுரை ஒருவர் கூறிட; மற்றவர் திருப்பிக் கூறிடல் வேண்டும்.

சமாதுக் கோயில்கள், குலதெய்வங்களில் 'பட்டவர்', 'ஆண்டவர்', 'மாண்டவர்', 'தீப்பாய்ந்தவர்', 'பாவாடைக்காரி', [அதாவது 'பேதை' 'பெதும்பை', என்ற இருபருவத்துக்குரிய பாவாடை சட்டை மட்டும் அணிந்த தாவணி போடும் மங்கைப் பருவமடையாத சிறுமியர்-களின் சமாது; சின்னப் பெண் தெய்வங்களின் கோயில்]......முதலியவைகளில் இந்த இறுதியுரை கூறிப் பூசை செய்தால் சித்திகள் விரைவில் கிடைக்கும்.

தீட்டுக் கழித்தல், புனிதப் படுத்தல், வீடு புத்துயிர்ச் செய்தல், வீடு குடிபோதல், புது மாடு, ஆடு, கோழி, புறு ........வாங்கி வந்து வீட்டில் காத்தல்....... முதலிய அனைத்துக்கும் இந்த 'இறுதியுரை' யைக்கூறி மஞ்சள் தண்ணீரை மாவிலையால் தொட்டு வீட்டிலும், உயிருள்ளவர்கள் மீதும் தெளிக்க அனைத்தும் தூய்மை, வாய்மை, உய்வு அடைந்திடும்; பிறகு சிவபுராணம், காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம், கட்டு மந்திறம், கருவறைப் புத்துயிர்ப்பு மந்திறம்.........முதலிவை கூறிப் பூசைகளை நிறைவு செய்ய வேண்டும்.

இந்த வீடுபேறு வழங்கு இறுதியுரை பற்றிய வாசகங்களில் முதல்'......மூவாறு, பதினெட்டுப் படைவீடுகளும; அடுத்து இருநாலு எண்டிசைச் சத்திகளும் பத்துச் சீவநிலைகளும சேர்ந்து முப்பத்தாறு பூசாமொழி வாசகமாகிச் செவிப்பறை தொட்டுச் செத்தாரையும, சாவோடு போராடுபவரையும், சாவை வெல்வோரையும தரமாக்கிடுகிறது......' என்ற குருபாரம்பரிய வாசகத்தோடு விரிலஞ்சி இவ்வறிவிப்பை நிறைவு செய்கிறோம்.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' —என்றும
''எம் கடன் பணி செய்து கிடப்பதே'' —என்றும்;
''எம் செயலாவது ஏதுமில்லை பராபரமே — அனைத்தும்
நும் செய லென்று உணரப் பெற்றோம யாம்'' —என்றும்;

உணர்ந்தே குருபாரம்பரிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுக்கு விதிவிலக்குக் கண்டு பிடித்து இது போன்ற பூசாமொழிகளையும்; பிற பூசாவிதிகளையும் வெளியிடுகிறோம யாம். மக்களுக்காக மகேசுவரத் தண்டிப்புக் கண்டிப்போடு நிற்கட்டும்

அன்பு

குவலய குரு பீடம், குருதேவர், ஞானாச்சாரியார்

தமிழ்மொழி மட்டுமே சமய, சமுதாய, அரசியல், தொழில், கலை, கல்வி........ முதலிய அனைத்துத் துறைகளிலும் முழுமையாக ஆட்சி செய்தல் வேண்டும். அப்பொழுது தான், அன்னியர்களின் ஊடுருவல்களையும்; அன்னியர்களால் உருவாகும் துரோக விரோதங்களையும் ஒழிக்க முடியும்!

எல்லாமொழிகளிலும், தமிழ்மொழியில் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள பூசாமொழிகளையும், விதிகளையும், வாசகங்களையும்; அருளூறு செயல்களையும் ஒலிநயம்குன்றாமல் மொழி பெயர்க்க வேண்டும். தமிழ் மொழியின் அருளாற்றலை அனைவரும் அறியச் செய்ய வேண்டும். தமிழகத்துக்குள் அன்னிய மொழிகளே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான், தமிழகத்துக்குள் அன்னியர்களே இல்லாத நிலை தானாக உருவாகிவிடும். இதற்காக அன்னிய மொழியினர் கட்டாயமாகத் தமிழ் மொழியாகத்தான் வாழ வேண்டுமென்ற நிலையை உருவாக்கியேயாக வேண்டும்.

அதற்குரிய அரிய பெரிய செயல்நிலைகளை இ.ம.இ அங்கத்தினர்களுக்-கிடையில் பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், கட்டுப்பாடும் தலைமையை மதித்துச் செயல்படலும் பசுமையாக வளவளர்ச்சி பெறவேண்டும்! பெறவேண்டும்! பெறவேண்டும்! இவற்றையே, யாம், பொறுப்பேற்றதும் எமது கருத்துரையாக வழங்குகிறோம். — காக்கா வழியன் பண்ணையாடி, சித்தர் காகபுசுண்டர் இ.ம.இ யின் இரண்டாவது தலைவர்.

---



# இந்தியாவில் மார்க்சீயம் - 16

—சித்தர்

1890 அக்டோபர் 5இல் செர்மன் நாட்டிலிருந்த 'செர்மன் சோசல் டெமாக்ரடிக்' அமைப்பிலிருந்த இடது சாரி எதிர்ப்பாளர்களை மிகக் கடுமையாக விமர்சித்து அவர்களுடைய தீய செல்வாக்கை ஒழித்தார். இவரது இப்போக்கை 'பெர்லின் மக்கள் பத்திரிக்கை' (Berliner Valksblatt) என்ற பத்திரிக்கைப் பெருமளவில் வரவேற்று விளம்பரம் செய்தது. இப் பத்திரிக்கை இடது சாரி எதிர்ப்பாளர்களை எங்கல்சின் விமர்சனத்தின் உயிர்நாடியாக இருந்த ''இளைஞர்கள்'' [அரசியல் வளர்ச்சி-யற்றவர்கள், அனுபவமற்றவர்கள், சிறு பிள்ளைத்தனமாக இருந்தவர்கள்] என்ற சொல்லை அதிகமாகப் பயன்படுத்திற்று. இதே மாத இறுதிக்குள் எங்கல்சு பிரஞ்சு நாட்டுத் தொழிலாளர் கட்சிக்குள் [பூர்ஷ்வாக்கள்] பூர்சுவாக்கள் என்று கருதும் தகுதிப்படைத்த குட்டி முதலாளிகள் ஊடுருவல் செய்து ''சந்தர்ப்பவாதக் கொள்கை'' மூலம் மாபெரும் கேடுகளை விளைவிக்க முயன்றதைக் கண்டுபிடித்தார். அதனைக் கடுமையாகத் துணிந்து தாக்கி விமர்சித்து அக்கட்சியை காப்பாற்றினர். திரு. இலபார்க் அவர்கள் எங்கல்சின்எச்சரிக்கையைச் சரியாகப் பயன்படுத்தி பிரஞ்சு தொழிலாளர் இயக்கத்தைக் காப்பாற்றினர்.

1891 சனவரி மாதக் கடைசியில் 'செர்மன் சோசல் டெமாக்ரசு' இயக்கம் தனது வேலைத் திட்டம் பற்றி மாநாடு கூட்டிட முயன்றது. அதைக் கண்ட எங்கல்சு அந்த இயக்கத்துக்கு தெளிவான வழிகாட்டிட 'புதிய காலம்' பத்திரிக்-கையில், கார்ல் மார்க்சு எழுதிய 'கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சனம்'

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

# குருவாசகங்கள்

1 அன்றாடம் கண்ணுக்கு முன் காணும் கணக்கற்ற காரிகையர் மாதந் தோறும் பலரும் புனித மலர்களே! இவர்களைப் பூசை செய்தே பூவுலகும் மூவுலகும் வெல்லலாம்.

2. அத்தனைக்கும் மூத்தவளான ஆத்தாளின் வடிவான பெண்டிரை அன்புடன் நினைத்துப் பாசமுடன் பரவிச் சேர்ந்து வாழ்ந்தாலே அருட் சொத்தனைத்தும் தேடிவந்து சேரும்.

3. பூசைத் தெய்வமாக, மலராக வந்த பாவையரை விதவையரென ஒதுக்கல் மாபெரும் பழி-யையும், பாவத்தையும் நல்கும்.

4. அங்க மெல்லாம் கையாக்கி ஆயுதமெடுத்துக் காக்கும் ஆத்தாளின் வடிவான பெண்டிரே பேரின்ப வீடு.

5 திங்கள் சூடிய சிவனே மங்கைக்குப் பாதி உடல் ஈந்த பிறகு; மங்கையை அடிமைப் படுத்துதல் பெரும் பாவமும், பழியுமே தரும்.

6. சங்கரனாரே, மங்கையை முடிமேல் தாங்கிய பின்னும் பெண்ணை அருளுலகத் தடையென மறுத்தலும் வெறுத்தலும், பழித்தலும், இழித்தலும் பேதமையன்றோ!

7 மூவரும், தேவரும், உம்பரும், பிறரும் போற்றித் துய்த்து உய்வு பெறும் இன்ப ஊற்-றான பெண்களே துன்பம் நீக்கும் மருந்து.

8. கங்கைக் கரைக் கண்ணன் எங்கும், எப்போதும், நங்கையரோடிருப்பது கண்டும் மங்கை-யரை நீங்கும் தவ வாழ்வு எற்றுக்கு?

9 சித்தர்கள் கன்னிகளையே ஆத்தாளாக்கிப் பூசைகள் நிகழ்த்த மறைகளும், முறைகளும், நெறிகளும், வேதங்களும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும் நல்கியிருப்பது கண்டும் பெண்ணைக் கோபிப்பதோ, தண்டிப்பதோ, வருத்துவதோ பெரும் பாவம் என்பது புரியாதிருப்பது மடமையினும் மடமையன்றோ!

10. சித்தர்கள் 'பெண் பழியே பெரும்பழி' எனப் புகன்றும் பெண்களை இழிவு செய்யும் புன்மையாளர் வாழ்வதே இயற்கையின் சீற்ற மிகு தண்டனைகளுக்குக் காரணம்.

11. அறியாமை மிக்கவரின் இச்சையடக்கச் சொல்லிய சூட்சமங்களே மோட்ச நரகங்கள்

12. புரியாமை மிக்கவரின் வெறிப் போக்குகளை நெறிப்படுத்தும் சூழ்ச்சிமிகு ஆட்சி சொற்களே பாவ புண்ணியங்கள்.

---

தொடர்பு: தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார் B Sc.,
56, N.G.O. காலனி, பொன்னேரி-601204.

---

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி-601204.